tnkalvi.online

No. of Printed Pages : **11**

8452

A

பதிவு எண்
Register Number

PART - III

வணிகவியல் / COMMERCE

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours] [Maximum Marks : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note : (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

1. ஒரு வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானம் அடுத்த ஆண்டில் வரி விதிக்கப்பட்டால் வரி விதிக்கப்பட்ட ஆண்டு _____.

(அ) ஒளி ஆண்டு (ஆ) முந்தைய ஆண்டு

(இ) நாட்காட்டி ஆண்டு (ஈ) மதிப்பீட்டு ஆண்டு

The year in which income is earned for which tax will be paid in the next year, that tax payable year is :

(a) Light year (b) Previous year

(c) Calendar year (d) Assessment year

2. பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகக்கூடிய பொருட்களின் சேமிப்பிற்காக _____ பண்டகக்காப்பகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(அ) குளிர்பதன (ஆ) பிணையகாப்பு

(இ) கூட்டுறவு (ஈ) தனியார்

_____ warehouses are used for storing perishable goods like fruits, vegetables etc.

(a) Cold storage (b) Bonded

(c) Co-operative (d) Private

3. பின்வருவனவற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை ?

(அ) பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் அல்லது விற்பனை

(ஆ) பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல்

(இ) சம்பளம் / கூலி

(ஈ) இடர் ஏற்றல்

Which one of the following does not characterise business activity ?

(a) Sale or exchange of Goods and Services

(b) Production of Goods and Services

(c) Salary or Wages

(d) Presence of Risk

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

4. பின்வரும் நபர்களில் யாரால் ஒப்பந்தம் நிறைவேற்ற முடியும் ?

(அ) வாக்குறுதி வழங்குபவரின் சட்டப்பிரதிநிதிகள்

(ஆ) வாக்குறுதி வழங்குபவரின் முகவர்

(இ) வாக்குறுதி வழங்குபவர் மட்டும்

(ஈ) இவை அனைத்தும்

Which of the following persons can perform the contract ?

(a) Legal representatives of Promisor

(b) Agent of the Promisor

(c) Promisor alone

(d) All of the above

5. இந்திய ரிசர்வ் வங்கியால் உண்மை நேர மொத்தத் தீர்வக அமைப்பு தொடங்கப்பட்ட ஆண்டு :

(அ) 2013 (ஆ) 2005 (இ) 2014 (ஈ) 2003

Real Time Gross Settlement System was launched by the RBI in the year :

(a) 2013 (b) 2005 (c) 2014 (d) 2003

6. வியாபார இடைநிலையர்களை _____ வகைகளாகப் பிரிக்கலாம்.

(அ) ஐந்து (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) இரண்டு

Merchant middlemen can be classified into _____ categories.

(a) Five (b) Three (c) Four (d) Two

7. சரக்கு மற்றும் சேவை வரி என்பது _____.

(அ) மறைமுக வரி

(ஆ) சரக்கு மற்றும் சேவைகளின் வகையை பொருத்தது

(இ) நேரடி வரி

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

What kind of Tax is GST ?

(a) Indirect Tax

(b) Depending upon the type of Goods and Services

(c) Direct Tax

(d) All of the above

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

8. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது.

(அ) வணிகம் (ஆ) வியாபாரம்

(இ) உற்பத்தித் தொழில் (ஈ) இவை அனைத்தும்

Normally high level risk is involved in :

(a) Commerce (b) Trade

(c) Industry (d) All of the above

9. இரு தரப்பு ஒப்பந்தம் மூலம் விடுவிக்கப்படுவது _____.

(அ) ரத்து செய்தல் (ஆ) திருத்தம்

(இ) பரிமாற்றம் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

Discharge by mutual agreement may involve :

(a) Rescission (b) Alteration

(c) Novation (d) All of the above

10. ஒரு குறிப்பிட்ட வகைப் பொருட்களை மட்டும் விற்கும் சில்லறைக் கடைகள் _____ என அழைக்கப்படுகிறது.

(அ) பொதுப் பண்டகச்சாலைகள்

(ஆ) சந்தை வியாபாரிகள்

(இ) தெருக் கடைகள்

(ஈ) ஒரே வகை பண்டகச்சாலைகள்

Small shops which deal in a particular line of products are called as _____.

(a) Common markets

(b) Market traders

(c) Street stalls

(d) Single line stores

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

11. A, B, C கூட்டு ஒப்பந்தத்தின்படி, ₹ 50,000 D என்பவருக்கு செலுத்த வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதை நிறைவேற்றுவதற்கு முன், C இறந்து விடுகிறார். இங்கே, ஒப்பந்தம் :

(அ) A மற்றும் B மட்டும் தனியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

(ஆ) C -யின் மரணத்தினால் ஒப்பந்தம் செல்லாது.

(இ) A, B மற்றும் D -க்கு இடையே ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

(ஈ) C -ன் சட்ட பிரதிநிதிகளுடன் சேர்ந்து A மற்றும் B ஆகியோரால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

A, B, C jointly promised to pay ₹ 50,000 to D. Before performance of the contract, C dies. Here, the contract :

(a) should be performed by A and B alone
(b) becomes void on C's death
(c) should be renewed between A, B and D
(d) should be performed by A and B along with C's legal representatives

12. _____ ஒரு பொதுக்காப்பீட்டு வகையினைச் சார்ந்தது அல்ல.

(அ) மருத்துவக் காப்பீடு (ஆ) கடல்சார் காப்பீடு
(இ) தீ காப்பீடு (ஈ) ஆயுள் காப்பீடு

_____ is not a type of General Insurance.

(a) Medical Insurance (b) Marine Insurance
(c) Fire Insurance (d) Life Insurance

13. கீழ்க்காண்பனவற்றில் எது பழமையான வியாபார அமைப்பு வடிவம் ?

(அ) கூட்டுறவுச் சங்கம் (ஆ) தனியாள் வணிகம்
(இ) நிறுமம் (ஈ) கூட்டாண்மை

Which is the oldest form of business organisation ?

(a) Co-operative society (b) Sole proprietorship
(c) Company (d) Partnership

14. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு :

(அ) 2006 (ஆ) 2004 (இ) 2008 (ஈ) 2007

Micro, Small and Medium Enterprises Development (MSMED) Act was enacted in the year :

(a) 2006 (b) 2004 (c) 2008 (d) 2007

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

15. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) இறக்குமதி வியாபாரம் (ஆ) மொத்த வியாபாரம்

(இ) மறு ஏற்றுமதி வியாபாரம் (ஈ) ஏற்றுமதி வியாபாரம்

Choose the odd one out.

(a) Import Trade (b) Wholesale Trade

(c) Entrepot Trade (d) Export Trade

16. அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம் என்பது :

(அ) வேலைவாய்ப்பை உருவாக்குதல்

(ஆ) மக்களுக்கு சேவை செய்தல்

(இ) இலாபம் ஈட்டுதல்

(ஈ) மேற்கூறிய அனைத்தும்

The primary objective of the State enterprises is to :

(a) Provide Employment

(b) Serve the people

(c) Earn profit

(d) All the above

17. கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக்கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது :

(அ) கப்பல் துணைத்தலைவர் இரசீது

(ஆ) கப்பல் சீட்டு

(இ) வாணிகத்தூதுவர் இடாப்பு

(ஈ) கப்பல் இரசீது

The _____ receipt is an acknowledgement of receipt of goods on the ship issued by the captain.

(a) Mate's Receipt

(b) Shipping Bill

(c) Consular Invoice

(d) Bill of Lading

18. அயல்நாட்டு பத்திர வெளியீட்டு உரிமை தரும் ஆவணம்.

(அ) வைப்பு இரசீது (ஆ) உரிமை இரசீது

(இ) உரிமை சான்றிதழ் (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

An instrument representing ownership interest in securities of a foreign issuer is called _____.

(a) a depository receipt (b) an ownership receipt

(c) an ownership certificate (d) None of the above

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

19. பெயர்ச்சியியலின் முக்கிய நன்மை _____.

(அ) இலாபம் ஈட்டுதல் (ஆ) உற்பத்தி மேம்பாடு

(இ) பண்டகக்காப்பு (ஈ) செலவுகளை குறைத்தல்

The main benefit of Logistics is :

(a) Profitability (b) Productivity

(c) Storage (d) Cost Minimisation

20. செலுத்து சமநிலையின் உபரி வெளிக்காட்டுவது :

(அ) இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சமநிலைக்கு அதிகமாக இருத்தல்

(ஆ) ஏற்றுமதி இறக்குமதியை விட அதிகமாக இருத்தல்.

(இ) இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகமாக இருத்தல்.

(ஈ) இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் சமமாக இருத்தல்.

Balance of Payments surplus indicates :

(a) Exports and Imports are above Equilibrium

(b) Exports are more than the Imports

(c) Imports are more than Exports

(d) Exports and Imports are at Equilibrium

பகுதி - II / PART - II

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

Note : Answer **any seven** questions. Q.No. **30** is **compulsory**.

21. பொருளாதார நடவடிக்கைகள் என்றால் என்ன ?

What is meant by Economic Activities ?

22. இந்து சட்டத்தின் இரண்டு பிரிவுகள் யாவை ?

What are the two schools of Hindu Law ?

23. பற்று அட்டை (Debit Card) சிறு குறிப்பு வரைக.

Write a short note on Debit Card.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

24. தனி உரிமையியலின் இரண்டு தீமைகளைக் கூறுக.
State two disadvantages of Franchising.

25. ஏதேனும் இரண்டு பருவகால உற்பத்தி ஆனால் தொடர் நுகர்வு பொருட்களுக்கு உதாரணம் தருக.
Give any two examples of seasonal production but regular consumption.

26. குறு நிறுவனங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
Give two examples for Micro enterprises.

27. சிறப்புப் பண்டக சாலைகள் என்றால் என்ன ?
What are Speciality Stores ?

28. ஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன ?
What is meant by Export Trade ?

29. ஒப்பந்தம் என்றால் என்ன ?
What do you mean by Contract ?

30. தமிழ்நாட்டின் முக்கியமான பண்டைய வர்த்தக நிலையங்கள் இரண்டு கூறுக.
Give two examples of Important Ancient Trade Centres in Tamil Nadu.

பகுதி - III / PART - III

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

Note : Answer **any seven** questions. Q.No. **40** is **compulsory**.

31. தொழில் நெறிமுறைகளின் கருத்து என்ன ?
What do you mean by the concept of Business Ethics ?

32. கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது ?
What is the minimum and maximum number of members in a Partnership concern ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

33. காப்பீடு – வரையறு.
Define Insurance.

34. பொது கழகங்கள் என்றால் என்ன ?
What is meant by Public Corporations ?

35. அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று தீமைகளைக் கூறுக.
Explain any three disadvantages of Foreign Direct Investment.

36. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி பொருட்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
Mention three important items of India's Import and Export.

37. நடப்புக்கணக்கின் வரவுப் பக்கத்தில் தோன்றும் இனங்கள் யாவை ? (ஏதேனும் 3)
What are the credit items shown in Current account ? (any 3)

38. இரு தரப்பு வாக்குறுதிகளின் வகைகள் யாவை ?
What are the kinds of Reciprocal Promises ?

39. சுய உதவிக் குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விவரிக்கவும்.
Explain any three features of Self Help Group.

40. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் நன்மைகள் யாவை ? (ஏதேனும் 3)
What are the advantages of inland waterways ? (any 3)

பகுதி - IV / PART – IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

Note : Answer **all** the questions.

41. (அ) வணிகத்தின் பல்வேறு தடைகளைக் கூறுக.

அல்லது

(ஆ) சமூகப் பொறுப்புணர்வின் தேவைகளை விளக்குக. (ஏதேனும் 5)

(a) What are the hindrances of Commerce ?

OR

(b) Explain the need for Social Responsibility. (any 5)

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

42. (அ) புறத்திறனீட்டலின் நன்மைகளைக் கூறுக. (ஏதேனும் 5)

அல்லது

(ஆ) கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி. (ஏதேனும் 5)

(a) Enumerate the advantages of Outsourcing. (any 5)

OR

(b) Explain the types of dissolution of Partnership firm. (any 5)

43. (அ) அரசு நிறுமங்களின் இயல்புகள் யாவை ? (ஏதேனும் 5)

அல்லது

(ஆ) பல்வேறு வகையான குறுகியகால நிதி ஆதாரங்களை விளக்குக. (ஏதேனும் 5)

(a) What are the features of Government Company ? (any 5)

OR

(b) Explain the kinds of sources of Short Term finance. (any 5)

44. (அ) மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? (ஏதேனும் 5)

அல்லது

(ஆ) இழப்பீடு என்றால் என்ன ? அவற்றின் வகைகள் யாவை ?

(a) Distinguish between Wholesaler and Retailer. (any 5)

OR

(b) What is meant by damages and what are its types ?

45. (அ) சிறு குறிப்பு வரைக.

(i) பகுப்பாய்வு உற்பத்தித்தொழில்

(ii) மரபுசார் உற்பத்தித்தொழில்கள்

(iii) கட்டுமானத் தொழில்கள்

அல்லது

(ஆ) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை ? (ஏதேனும் 5)

(a) Write a short note on :

(i) Analytical industry

(ii) Genetic industries

(iii) Construction industries

OR

(b) Explain the characteristics of Sole Trading business. (any 5)

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

46. (அ) பன்னாட்டு நிறுமத்தின் நன்மைகள் யாவை ? (ஏதேனும் 5)

அல்லது

(ஆ) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக. (ஏதேனும் 5)

(a) What are the advantages of MNCs ? (any 5)

OR

(b) Explain the advantages of Railway transport. (any 5)

47. (அ) கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

அல்லது

(ஆ) செலுத்தல் சமநிலைக்கும் வாணிபச் சமநிலைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? (ஏதேனும் 5)

(a) Distinguish between Bill of Lading and Charter Party.

OR

(b) Distinguish between Balance of Payment and Balance of Trade. (any 5)

- o O o -

tnkalvi.online

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-commerce-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

.

tnkalvi.online